<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# MCOP. No.267/2024

2025–ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.2 வது** நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு–1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அப்துல் ரகுமான் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன்.

**<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் சொன்னேன். இறந்துபோனவர் என்னுடைய குடும்பநண்பர் ஆவார். இறந்துபோனவர் பஸ்சில் ஏறும்போது தவறி விழுந்தார் என்றால் சரியல்ல. நான் அவரை பஸ்சில் ஏற்றிவிட்டு அங்கு தான் இருந்தேன். அவர் பின்படிக்கட்டு வழியாக பஸ்சில் இருந்து விழுந்தார். பஸ்சில் கூட்டம் இருந்ததா என்றால் ரொம்ப கூட்டமாக இல்லை ஆனால் Standல் இருந்தார்கள். அவர் படிக்கட்டில் ஏறி அடுத்த சீட் அருகில் நின்றுகொண்டிருக்கும் சமயத்தில் விழுந்தார். படிக்கட்டு அருகே பயணம் செய்ததால் அவராக தவறி கீழே விழுந்துவிட்டார் என்றும், விபத்துக்கு அவர் தான் காரணம் என்றால் சரியல்ல. விபத்துசம்மந்தமாக வேறு நீதிமன்றத்தில் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. பேருந்துஓட்டுநர் பேருந்தை மெதுவாக தான் ஓட்டிசென்றார் என்றும், இறந்துபோனவர் தான்

Balance தவறி அவராகவே தடுமாறி விழுந்துவிட்டார் என்றால் சரியல்ல. விபத்திற்கு பேருந்து ஓட்டுநர் காரணம் அல்ல என்றால் சரியல்ல. நான் விபத்தை சுமார் 30, 40 மீட்டர் தூரத்தில் பார்த்தேன். எந்த மாறி வேகத்தில் பேருந்து சென்றது என்று என்னால் கூற முடியாது என்றால் விபத்து சமயத்தில் வேகமாக தான் சென்றது. நான் அவருடைய உறவினர் என்பதால் பார்க்காத விபத்தை பார்த்ததாக மனுதாரர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் நிருபணவாக்குமூலத்தில் கூறியுள்ளது போன்று இறந்தவருக்கு மருத்துவ செலவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>:

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.